## <u>வாக்குமூலம்</u>
## <u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
## <u>வழக்கு எண் : CC.No.208/2018</u>
## <u>வழக்கு சாட்சி PW-4</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சகாய செல்வின் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமலிங்கம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | சென்னை | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சென்னை மத்தியகுற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 17.08.2016 ம் தேதி, 12.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் வேலைய்யா என்பவர் பிரேமா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைப்படி காவல்நிலைய குற்ற எண்.329/2016, இதச பிரிவு 304(A) படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல்தகவல்அறிக்கை **அசா.ஆ.2** ஆகும். பின்னர் இந்த வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அதே தேதி, 13.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜெயக்குமார் மற்றும் சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர், சாட்சிகள் பிரேமா, மாடசாமி, செல்லப்பா,

கல்யாணியம்மாள், ஜெயக்குமார், சிவக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 17.08.2016ம் தேதி, மாலை 04.00 மணி முதல் 05.00 மணி வரை திருநெல்வேலி கேலக்ஸி தனியார் மருத்துவமனை சென்று இறந்து போன கல்லூத்து செட்டியாரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும்.

பின்பு அதே தேதி, மாலை 17.10 மணிக்கு பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேதத்தை அனுப்பி வைத்தேன். கேலக்ஸி மருத்துவமனை மருத்துவர். அன்புராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது முதற்கட்ட விசாரணையை முடித்து வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

பின்னர், இந்த வழக்கை ஆய்வாளர் கே.எஸ்.பாலமுருகன் என்பவர் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, விபத்துக்கு காரணமாக வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார். அது **அ.சா.ஆ.6** ஆகும்.

பின்னர், 06.09.2016ம் தேதி, 12.00 மணிக்கு தென்காசி காவல்நிலையத்தில் வைத்து எதிரியை காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து காவல்நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்.திரு.சுடலைமுத்து என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். அது **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் வேலய்யா

மற்றும் என்னையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் அவர் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவு 304(A) படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ நாள் 16.08.2016 ம் தேதி, 16.50 மணி என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகள் என்னுடைய விசாரணையில் அதே தேதி, 13.30 மணிக்கு சம்பவயிடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்ததாக என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தை சுற்றிலும் ேஹாட்டல், கடைகள், ரிலையன்ஸ் பல்க் எல்லாம் உள்ளது என்றால் சரிதான். பக்கத்தில் உள்ள கடைக்காரர்களை நான் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக நான் விசாரிக்கவில்லை. வாகன ஆய்வாளர் அறிக்கையில் சம்பவநேரம் 16.08.2016 ம் தேதி, 18.50 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20 நாட்கள் கழித்து 07.09.2016 அன்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதம் குறித்து எந்த விளக்கமும் வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான். வாகனத்திற்கு எந்த சேதமும் இல்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலக காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Athilingam, Technical Sub Inspector of Police, Video conference Co-ordinator சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலகம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 10:59:29 +0530